## மகாபலிபுரத்து கடல்

கள்ளிப் பூக்களாய் மலர்ந்து
காலையில் வாடி உதிரப் போகும் இரவு.
கடலாடும் இருளர் பழங்குடி பாடகர்களின் குரல்.
முன் பாட்டும் பின்பாட்டுமாய் ஓங்கி ஒலிக்கிறது.
வெள்ளைப் பறவையாய் வானில் சிறகடிக்கும் நிலவு
ஆரிப்பரித்து இரையும் கடல்மேல்
வெள்ளிச் சிறகுகளை உதிர்த்தபடி பறக்கும்.
மாமல்லபுரத்துப் பாறையில் செதுக்கப்பட்ட
தேவர்களும், கின்னரர்களும், கிம்புருடர்களுமாய்
சிறகுகளின்றியே பறந்து வந்து வானில் கூடியுள்ளனர்.
குழலும், தவுலுமாய் இசைக்கருவிகள்
கடலின் காற்றில் அதிர்வுகளை விதைக்கையில்
புற்றில் உறையும் கோதுமை நாகங்கள்
படமெடுத்து ஆடுகின்றன.
மல்லிகைப் பூச்சரமாய் வெள்ளைப் பற்களைக் காட்டிச்
மணலில் ஜதி போட்டு ஆடும் கருப்புப் பெண்களின்
உள்ளங்கைகள் இருட்டில் தாமரைகளாய் மலர்கின்றன..
.
கடலில் பாய்ந்த ஈரத்தோடு எழுந்து வந்து
குறி சொல்கிறார்கள் இருளர்களின் சாமியாடிகள்.
கொலை செய்யப்பட்டு கடலில் மீனாகிப் போன
பெண்களின் ஆவிகளோடு அவர்கள் பேசுகிறார்கள்.
ஆணும், பெண்ணும் , அரவாணிகளுமாய் வட்டமாய்க்
கூடியாடும்
அவர்கள் கடலில் குடிகொண்ட தங்களின் கன்னியம்மனை
அதட்டித் தங்களோடு வரும்படி கூப்பிடுகிறார்கள்.
இரவு முழுவதும் களியாடிய மகாபலிபுரத்துக் கடல்

காலையில் அவர்களின் விரல் பற்றி மௌனமாய்ப்
பின் செல்கிறது அவர்களின் குடிசைகள் நோக்கி.
– 9 செப்டம்பர் 2020